★ வடக்கு-கிழக்கில் சமாதானம் ஏற்படவேண்டும்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 20 இதழ் 22
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 4-3-1994

## வடக்கு-கிழக்கில் சமாதானம் ஏற்படவேண்டும் - லயனல் பேட்டி

(கொழும்பு)
'வடக்கு-கிழக்குப் பகுதியில் சமாதானத்தை ஏற்படுத்துவதை உதாசீனம் செய்துவிட்டு, ஒவ்வொருவரும் தம் தம் மனப்போக்குப்படி நடக்கத் தொடங்கினால் நாம் எதிர்காலத்தில் மேலும் மேலும் பல இளைஞர்களை இழக்க நேரிடும். இரத்த வெள்ளம் இந்த நாட்டில் பெருக்கெடுத்து

(4-ம் பக்கம் பார்க்க)

படையினரின்

## இருமாத தாக்குதலில் 30 மீனவர் பலி

(யாழ்ப்பாணம்)
சென்ற இரு மாதங்களுக்குள் கடற்படையினராலும் விமானப்படையினராலும் வடபகுதியைச் சேர்ந்த 30 மீனவர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் 50 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

வடபகுதி மீனவர்மீது இவ்வருடம் கடற்படையினர் தமது தாக்குதல்களை அதிக

(4-ம் பக்கம் பார்க்க)

# தெற்கு தேர்தலில் ஐ.தே.க. தோல்வி கண்டால் டி.பி. ஜனாதிபதி வேட்பாளர்க்கான நியமனத்தை இழக்கநேரிடும்!

## அரசியல் ஆய்வாளர் கணிப்பு

(கொழும்பு)
இம்மாதம் 24-ம் திகதி நடைபெறவுள்ள தென்மாகாணசபைத் தேர்தலில் ஐக்கியதேசியக்கட்சி படுதோல்வியடைந்தால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தகுதியை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இழந்துவிடுவார். இந்த நிலையில் ஜனாதிபதி வேட்பாளராக வேறொருவரைத் தெரிவு செய்ய ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்பீடம் ஒரு முடிவுக்கு வந்துவிடும். இவ்வாறு அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்

தென்மாகாணசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி படுதோல்வியுறும் பட்சத்தில் கட்சித் தலைவியும், எதிர்க்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவும் அக்கட்சியிலிருந்து நீக்கப்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மாகாணசபைத் தேர்தலின் முக்கியத்துவம் பற்றி பி. பி. ஸி தெரிவிக்கையில்,

தென்மாகாணசபைத் தேர்தலில் ஆளும் ஐ. தே. கட்சி வெற்றி பெறுவதற்காக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக இனத்துவேஷப் பிரசாரங்களை மிகத் தீவிரமாக செய்து

(4-ம்பக்கம் பார்க்க)

ராஜினாமா விவகாரம்:

## அஷ்ரபின் முடிவை மாற்றுமாறு வற்புறுத்து

(கொழும்பு)
நாடாளுமன்ற எம். பி பதவியிலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம்.எச். எம். அஷ்ரப் ராஜினாமாசெய்ய எடுத்த முடிவை மாற்றுமாறு அவருக்கு வற்புறுத்தப்பட்டுள்ளது.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் இவ்வாறு வற்புறுத்தி

(4-ம் பக்கம் பார்க்க)

## மன்சூர் - அஷ்ரப் வார்த்தை மோதல்

கொழும்பு
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் ஏ. எச் எம். அஷ்ரப் ஒரு இனவாதி என வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். எம் மன்சூர் தெரிவித்துள்ளார்.

ஆனால் தேர்தல் சமயத்தில் அமைச்சர் மன்சூர் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் பல முறைகேடுகளில் ஈடுபட்டதாக ஜனாப் அஷ்ரப் மன்சூர் மீது குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜனாப் அஷ்ரப் நாடாளுமன்றப்பதவியிலிருந்து ராஜி

(4ம் பக்கம் பார்க்க)

## கிழக்கு-வவுனியா தேர்தலில் அரச பயங்கரவாதம்

- அமரசிறி தொடங்கொட

(கொழும்பு)
கிழக்கு மாகாணத்திலும், வவுனியாவிலும் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் வெற்றி பெறுவதற்காக ஐக்கியதேசியக்கட்சி அனைத்து அரச வளங்களையும், அரச பயங்கரவாதத்தையும் பயன்படுத்தியுள்ளது.

தென்மாகாண முன்னாள் முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட இவ்வாறு தெரிவித்தார்.

பெந்தர என்ற இடத்தில் இடம்பெற்ற தென்மாகாண சபை தேர்தல் பிரசார கூட்டம் ஒன்றில் பேசிய அவர் மேலும் கூறியதாவது:

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசு பல விதமான

(4ம் பக்கம் பார்க்க)

## கிழக்கு தேர்தல் முடிவுகள் பேச்சுவார்த்தைக்கு உறுதி தந்துள்ளது

(கொழும்பு)
கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நூற்றுக்கு 70 சதவிகிதத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டுள்ளனர்.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலை உறுதியாகியுள்ளதாகவும், இனப் பிரச்சினை சம்பந்தமாக அரசியல் தீர்வு காண அரசு மேற்கொள்ளும் பேச்சுவார்த்தைகளுக்கு அது நல்ல உறுதியைத் தந்துள்ளதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. -இ

## இன்று மகுசேனை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)
கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வெள்ளிக்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## கடல் தடைச்சட்ட நீக்கம் மீனவர்மீது தொடர்ந்து தாக்கு

(யாழ்ப்பாணம்)
கடல்வலய தடைச்சட்டம் நீக்கப்பட்டதாக அரசு அறிவித்த பிறகும்கூட வடபகுதிக் கடலில் மீன்பிடிப்போர்மீது தொடர்ச்சியாக இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவதாக வடபகுதி மீனவர்கள் கவலை வெளியிடுகின்றனர்.

மேலும் கடல்வலய தடைச்சட்டத்தை நீக்குவதாக அரசு கூறி வருவது தமக்கு வழங்கப்பட்டுவரும் நிவாரண வெள்ளை அமுல்படுத்துவதற்காகவேயன்றி வேறொன்றும் அல்ல என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்று நண்பகல் கீழ்முனை கடற்கரையிலிருந்து ஸ்ரீலங்கா படகு ஒன்று

(4ம் பக்கம் பார்க்க)

## கிராமசேவையாளர்க்கு பதவி உயர்வு

(கொழும்பு)
கிராமசேவையாளர்களுக்கு முதலாம் தரத்திற்கு பதவி உயர்த்தப்படவுள்ளனர்.

அமைச்சர் ஜோன் அமரதுங்காவின் பணிப்புரைக்கு அமைய பரீட்சை திணைக்களம் இதற்கென எழுத்து மூலம் பரீட்சை ஒன்றை நடாத்தவுள்ளது.

அடுத்த மாதம் 19ம் திகதி

(4-ம் பக்கம் பார்க்க)

## பேராதனை பல்கலைக்கு புதிய மாணவர் விடுதி

(கொழும்பு)
பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மாணவர்விடுதி நிர்மாண வேலைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு பல்கலைக்கழக விவகார அமைச்சர் விஜேரத்தின நாயக்கா உத்தரவிட்டுள்ளார்.

இந்த விடுதி இரண்டு கோடியே 80 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படுகிறது.

இதற்குத் தேவையான

(4ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**O/L கணிதம் 1994**

Distinction, Credit பெறு பேறடைய ஆண்டு 9, 10 உட்பட 30 வருட அனுபவ முள்ள B Sc ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, லேன் கோவிலடி, திருநெல்வேலி. (இ-844)

**விரைவில்**
**பாலர் ஆசிரியராக**

தகைமை: ஜி. சி. ஈ. (O/L) சனி, ஞாயிறு பயிற்சி வகுப்பு தேறி வர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். விரைவில் ஆரம்பம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கல்விக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (இ-845)

**வாருங்கள்**
**திருத்திப் பாருங்கள்**

சகல மணிக்கூடுகள், ரேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். உதிரிப் பாகங்களுக்காக நல்ல நிலையில் உள்ள மணிக்கூடுகள் வாங்கப்படும். லூசியா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (வசாவிளான் கூட்டுறவுச் சங்கம் அருகில்) கிளை; கண்டி வீதி, சாவகச்சேரி. (ஏ-3875)


## நியமனம்

(மானிப்பாய்)

1993 ஜனவரி மாதம் நடைபெற்ற சிறப்பர் பரீட்சையில் சித்தியடைந்த செல்வி எஸ். சுப்பிரமணியம் மத்திய அரசின் கீழ் யாழ். செயலகத்தில் சிறப்பாசன நியமனம் பெற்றுள்ளார். (71)

கேரதீவு

## வீதி, பாலம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

கோவிலாக்கண்டி பாலம் திருத்த வேலைகள் நடைபெறுகின்றன. கேரதீவு வீதியில் அமைந்திருக்கும் இப் பாலம் உடைந்ததால் இவ் வீதியூடான போக்கு வரத்துகள் பாதிப்படைந்திருந்தது. அத்துடன் கேரதீவு வீதியும் திருத்தப்படுகிறது. (101 - 59)

## வவுனியாவில் மரநடுகை

(வவுனியா)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் 31800 மரக்கன்றுகள் வவுனியா கோட்டத்தில் நடுகை செய்யப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பயன் விதைகள், ஆயிரம் தேக்கும், மற்றும் வேம்பு புளி, சமண்டலை ஆகியனவும் இவ்வாறு நடுகை செய்யப்பட்டுள்ளன" -நி

## நல்லினக் காளைகள் இறக்குமதி

(யாழ்ப்பாணம்)

முல்லை மாவட்டத்தில் மன்னாகண்டல் பகுதியில் நல்லின மாடுகளை உருவாக்கும் பொருட்டு கொழும்பிலிருந்து இரண்டு நல்லின காளைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக்குழுவினர் இறக்குமதி செய்துள்ளனர்.

இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு காளைகளையும் கொண்டு கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காளை சேவை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அப்பகுதி மக்களுக்கு சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

## பற்றறி தடையினால் அம்புலன்ஸ்சேவை பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திற்கு "பற்றறி" கொண்டு வருவதற்கு இராணுவத் தலைமைப் பீடம் விதித்துள்ள தடையினால் யாழ். சுகாதார பிராந்தியத்திலுள்ள அம்புலன்ஸ் வண்டிகளும், சுகாதார திணைக்கள வாகனங்களும் இயங்க முடியாது அவற்றின் சேவை பாதிப்படையும் நிலை ஏற்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

கொழும்பிலிருந்து அம்புலன்ஸ் வண்டிகளுக்கும், மற்றும் சுகாதார திணைக்கள வாகனங்களுக்கும் தேவையான பெரிய 'பற்றறி'களைக் கொண்டு வருவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக யாழ். சுகாதார திணைக்கள பிரதி மாகாண பணிப்பாளர் விடுத்த அவசர கோரிக்கையையும் கொழும்பிலுள்ள கூட்டுப்படை தலைமை அலுவலகம் நிராகரித்துள்ளதாக அறியப்படுகிறது. -72-நி

## சைவ சிறுவர் இல்லம் கொடி வாரம்

(கொழும்புத்துறை)

கைதடி சைவச் சிறுவர் இல்லத்திலுள்ள சிறுவர்களின் நலன்களுக்காக நன்மைகருதி யாழ். இந்து சமயப் பேரவையால் எதிர்வரும் 10-ம் திகதி வியாழக்கிழமைமுதல் கொடிவாரம் அனுஷ்டிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கொடித் தினம் 10-ம் திகதி வியாழன் முதல் 16-ம் திகதி புதன்கிழமை வரை ஒரு வாரம் அனுஷ்டிக்கப்படும். இந்நிகழ்வை இந்து சமயப் பேரவைத் தலைவர் ஆத்ம ஜோதி நா. முத்தையா ஆரம்பித்துவைப்பார். —154-நி

## ஆசிரியர்களுக்கான மெய்வல்லுநர் ஒழுங்குவிதி தொடர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்காக மெய்வல்லுநர் ஒழுங்கு விதிகள் பற்றிய தொடர் கருத்தரங்கு ஒன்றை யாழ் கல்வித் திணைக்களமும் யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கமும் இணைந்து நடாத்தவுள்ளன.

யாழ்ப்பாணம் 'பொஸ்கோ' நிறுவனத்தின் ஆதரவில் நடைபெறும் இந்தக் கருத்தரங்குத் தொடர் எதிர்வரும் 12ம்திகதி சனிக்கிழமை முதல் தொடர்ந்து ஐந்து வாரங்களுக்கு இடம்பெறும்.

ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும் இக் கருத்தரங்கில் மெய்வல்லுநர் விதிகளில் தேர்ச்சிபெற்ற விரிவுரையாளர்கள் கருத்துரை வழங்குவார்கள்.

மெய்வல்லுநர் விதிகளில் தேர்ச்சிபெற்ற உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்காக மாவட்ட ரீதியிலான பரீட்சை ஒன்று விரைவில் நடைபெறவிருக்கிறது. அதற்கு முன்னேற்பாடாகவே இந்தக் கருத்தரங்குத் தொடர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கருத்தரங்குத் தொடரில் பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை 'உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) கல்வியலயம் - I' என்ற முகவரிக்கு எதிர்வரும் 10ம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு கேட்கப்பட்டிருக்கிறது. -நி

யாழ். கடல்

## ஏரித்திட்ட ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதியினரால் ஒழுங்கு செய்யப்பட்ட யாழ். கடல் ஏரித்திட்ட ஆய்வரங்கு யாழ். பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் பேராசிரியர் கே. நவரத்தினராசா தலைமையில் நடைபெற்றது.

மேற்படி திட்டம் தொடர்பாக உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய செயல் திட்டங்களையும் நீண்ட காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய செயல் திட்டங்களையும் இனங்கண்டு உருவாக்குவதற்காக மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டன. இத்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாக உப்பாற்றுப் பகுதியை இம்மூன்று குழுக்களும் சென்று பார்வையிட்டன.

## தென்மராட்சி பகுதியில் கோழிகளுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

கோழிகளுக்கு ஏற்படும் வெள்ளை நோயிலிருந்து அவற்றைப் பாதுகாக்கும் நோக்குடன் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தென்மராட்சிக் கோட்டத்தில் கிராமம்தோறும் மேற்கொண்டு வருகின்றது.

இதன் முதற்கட்ட நடவடிக்கைகளாக சரசாலை மத்தி, சரசாலை வடக்கு, சரசாலை தெற்கு ஆகிய பகுதிகளில் தடுப்பூசி போடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9-00 மணிவரையில் தடுப்பூசி போடும் நடவடிக்கையில் தென்மராட்சிக் கோட்ட செயல வியலகு வேளாண்மைப்பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர். -நி


## யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க திருச்சபையின் மேய்ப்புப்பணி மகாநாடு

**10. தேசிய மேய்ப்புப் பணி மகாநாட்டிற்கு யாழ். மறை மாவட்டத்தின் பங்களிப்பு என்ன?**

(1) பல வினாக்கொத்துக்கள் யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க மக்களிடம் நிரப்பிஎடுக்கப்பட்டு கொழும்பு தேசிய மகாநாட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளது.
(2) புதுப்பித்தலை பற்றிய தனிப்பட்ட கருத்துக்களை 19, பக்கோம் பிளேஸ், கொழும்பு - 8 என்ற விலாசத்திற்கு அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளது.
(3) யாழ். மறைமாவட்ட மாநாட்டின் அறிக்கையை தேசிய மகாநாட்டிற்கு அனுப்பும்படி கேட்கப்படுகிறது.
(4) தேசிய மகாநாட்டிற்கு பிரதிநிதிகளை அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளது.

**11. இரண்டு சுற்று மடல்கள் வெளிவந்துள்ளன என்று சொன்னீர்கள் அப்படித்தானே?**

ஆம். ஒன்று இலங்கைக் கத்தோலிக்க ஆயர்களின் திருமடல். அதில் இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் 13 ஆயர்களும் ஒப்பமிட்டுள்ளனர். யாழ்.ஆயர் அவர்களின் பணிப்புரையின்படி அத்திருமடலின் முக்கிய பகுதிகள் அச்சிடப்பட்டு ஒரு ஞாயிறு தினத்தில் யாழ் மறை மாவட்டத்தின் சகல கோவில்களிலும், சிற்றாலயங்களிலும் இறை மக்களுக்கு வாசிக்கப்பட்டு பங்குத் தந்தையர்களால் விளக்கப்பட்டுள்ளது.

**12. மற்றையது யாழ்.ஆயர் அவர்களால் யாழ்.மறை மாவட்டத்தின் குருக்கள் துறவியர், பொதுநிலையினர்க்கு விடுக்கப்பட்ட சுற்று மடல்தானே?**

ஆம். அதேதான். அதுவும் ஞாயிறு திருப்பலியின் போது யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க இறைமக்கள் அனைவருக்கும் வாசித்து விளக்கப்பட்டுள்ளது.

**13. யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் விடுத்த அச்சுற்று மடலின் சிலமுக்கிய பகுதிகளைத் தர முடியுமா?**

திருத்தந்தையின் அழைப்பிற்கேற்ப கூட்டப்படும் இம்மகாநாடு தேசிய ரீதியில் இரண்டாவது என்று தெரிவிக்கும் ஆயர் அவர்கள் 25 ஆண்டுகளுக்கு முன் முதலாவது தேசிய மறைப்பணிச் சங்கம் நடந்த பின் ஏற்பட்ட மாற்றங்களை சீர்தூக்கிப் பார்க்கிறார். இம்மாற்றங்கள் எம் மறை வாழ்விலும் பல சவால்களைத் தந்துள்ளன என்கிறார்.

**14. இம்மாற்றங்களும் சவால்களும் எவை என சற்று விளக்கமாகச் சொல்ல முடியுமா?**

"போராட்டங்களும், நாடுகளின் பிரிவினையும், அகதிகள் இடம்பெயர்ந்தோர் பிரச்சினைகளும், ஒழுக்கச் சீர்குலைவுகளும், வறுமையும் மட்டுமீறிய தன்னலப் பற்றும்..." என்றிவ்வாறான மாற்றங்கள் எம்மறை வாழ்விலும் சவால்களைக் கொண்டுவந்துள்ளன என்கிறார்.

**15. யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க மேய்ப்புப்பணி மகாநாட்டின் நோக்கம் தேசிய மகாநாட்டின் நோக்கத்தை விட வேறுபட்டதா?**

இல்லை. நோக்கம் ஒன்றுதான். "தன்னைப் புதுப்பித்து பகிரும் திருச்சபையை நோக்கி" என்னும் மையப்பொருள் இலங்கை ஆயர் மன்றத்தினால் தெரிவு செய்யப்பட்டது. இதுவே யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க மேய்ப்புப்பணி மகாநாட்டின் ஆய்வுத் தலைப்புமாகும்.

அன்பளிப்பு:
இயக்குநரும், பணியாளர்களும்
யாழ். மனித முன்னேற்ற நடுநிலையம்,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

பொது மக்கள் தொடர்புக்குழு
மேய்ப்புப்பணி மகாநாடு
(இ-843)



## விசேட அறிவித்தல்

பொலிகண்டி
**அருள்மிகு கந்தவனம்**
**சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்**
தற்போது தர்மகர்த்தா சபையின்கீழ்
இயங்கிவருகிறது.
இவ்வாலயத்தில்
திருப்பணிகளோ அன்றி
அன்பளிப்புகளோ அல்லது
வேறு வழிகளில் உதவி செய்ய
விரும்புவோர்
மேற்படி ஆலய தர்மகர்த்தா சபையோடு
தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்,
தர்மகர்த்தா சபை,
**கந்தவனம் தேவஸ்தானம்,**
பொலிகண்டி, வல்வெட்டித்துறை.
(இ-846)

# சென்னாரெட்டி பதவிநீக்கல் மனு தள்ளுபடி

(சென்னை)

தமிழக ஆளுநர் பதவியிலிருந்து டாக்டர் சென்னாரெட்டியை நீக்கவேண்டும் எனக் கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை சென்னை உயர் நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்தது.

இவ்வழக்கை விசாரித்த நீதிபதி ஏ. ஆர். லஷ்மணன் ஆளுநரை நீக்குவது தொடர்பான ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் சான்றுகள் எதுவும் ரிட்மனுவில் காணப்படவில்லை என்றும் வெறுமனே பத்திரிகைச் செய்திகளை மட்டுமே அடிப்படையாகக்கொண்டது என்றும் தெரிவித்தார். —ஏ

# தமிழ் பேசும் மக்களுடன் அரசுக்கு பிரச்னை இல்லை!

## கனடாவில் இலங்கை அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்பேசும் மக்களுடன் அரசுக்கு எந்தவிதமான பிரச்னையும் கிடையாது எனவும் ஆயுதம் ஏந்தியிருப்பவர்களுடன் மாத்திரமே அரசுக்கு பிரச்னை இருப்பதாகவும் இலங்கை அரசு கனேடிய மக்களுக்கு அதன் தூதரகத்தின் மூலமாகத் தெரிவித்துள்ளது.

கனடாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் பொதுசன சாதனங்களுக்குப் பொறுப்பான அதிகாரி அசோக வீரசிங்க கனடா ரொரன்ரோ 'ஸ்டார்' பத்திரிகைக்கு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை அதிகாரி வெளியிட்டிருக்கும் இந்தக் கருத்து கனேடிய அதிகாரிகளின் கவனத்தை ஈர்த்துள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

# அனைத்துலக பெண்கள் தினம் ஓவிய இலக்கியப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு, விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் நடாத்தப்பட்ட இலக்கிய ஓவியப் போட்டி முடிவுகள் வருமாறு:

சிறுகதை: 1ம் இடம் வேணி சின்னத்தம்பி, விஞ்ஞேத் வீதி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (மண்ணே எழுந்திடுவீர்) 2ம் இடம்; அற்புதராணி காசிலிங்கம், 435, சங்கிதா வீதி, திருநெல்வேலி. (நிமிர்வு) 3ம் இடம் மீனலோஜினி அருணாசலம், மிருசுவில், சாவகச்சேரி. (மலர மறுத்த பூ)

கவிதை: 1. ஜெ. கவிதா, 'ஆனந்தவாசா', காங்கேசன்துறை வீதி, சுன்னாகம். (புலம் தேடும் புரட்சிப் புறாக்கள்) 2. பூபலாஜினி அருணாசலம் (ஆண்டு 12, வேம்படி மகளிர் கல்லூரி). (சிறையில் இருக்கும் தோழிக்கு). 3 செ. தயாளினி, ஆனந்தபுரம், கிளிநொச்சி. (கனவு சுமந்த கண்கள்)

ஓவியம்: 1. இ. மயூரலதா (மண்டைதீவு) மேஜர் செல்வராசா வீதி, கோண்டாவில் மேற்கு கோண்டாவில் 2. ஆன் சோபனா யேசுதாசன், யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம். 3 இ. மேனகா (மண்டைதீவு) முத்தை ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு.

# ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் வானொலிக் கலைஞர் மாதாந்த ஒன்றுகூடல் நாளை 5-ம் திகதி சனிக்கிழமை பி. ப. 3-00 மணிக்கு நல்லூரில் நடைபெறும்.

# வாதுவ 15ம் திகதி வருகிறது

(யாழ்ப்பாணம்)

வாதுவ கப்பல் எதிர்வரும் 15ம் திகதி பருத்தித்துறை நோக்கிப் புறப்படவுள்ளது.

இக்கப்பலில் யாழ். மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் மக்கள் வங்கி எழுதுவினைஞர்களுக்கு விண்ணப்பம் செய்திருந்த விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகளும் எடுத்து வரப்படுவதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந்த அனுமதி அட்டைகள் இங்கு வந்து சேர்ந்ததும் பரீட்சைக்கான தேதி பின் அறிவிக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (162)

# ஹெலி - புக்காரா நோட்டம்

(அரியாலை)

நேற்று ஹெலியும் புக்காராவும் யாழ். குடாநாட்டுக் கரையோரங்களான அரியாலை பாசையூர் மணியம் தோட்டம் பூம்புகார் ஆகிய இடங்களை சுற்றி வட்டமிட்டு பின்பு பலாலி சென்றது. (59-இ)

கிராமசேவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

51 நிலையங்களில் நடைபெறும் இப்பரீட்சைக்கு IIம் தரத்தைச் சேர்ந்த சுமார் 6 ஆயிரத்து ஐந்நூறு உத்தியோகத்தர் தோற்றவுள்ளனர். (க-இ)

# முன்னாள் பிரதி சபாநாயகர் காலமானார்

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதிச் சபாநாயகரும் எகிப்துக்கான இலங்கை தூதுவருமான நோர்மன் வைத்தியரத்ன காலமாகி விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

கடல் தடைச்சட்டம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர்களை நோக்கி கடும் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதாக அறியப்படுகிறது.

மேலும் நேற்றுமுன்தினம் இப்பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களை நோக்கி ஹெலிகொப்டர் ஒன்று 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

மீனவர்கள் கடலில் பாய்ந்து தப்பிக்கொண்டதால் பெரும் சேதம் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. (க இ)

வடக்கு-கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஓடும். இதனால் பிற்காலத்தில் இந்த சிறிய நாட்டில் மிஞ்சி இருக்கும் ஒரு இனத்தின் சாபத்துக்கும் நாம் ஆளாக வேண்டிவரும்.

இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் லயனல் பெர்ணாண்டோ திருகோணமலையில் ரூபவாஹினிக்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவித்தார். அவர் பேட்டியில் மேலும் கூறியதாவது:

சமாதானம் இந்த நாட்டில் ஏற்பட வேண்டுமானால் நாம் 50 ஆண்டுகளுக்கு முன் இலங்கை இருந்த நிலையை ஒரு தடவை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பிரித்தானியரிடமிருந்து சுதந்திரத்தைப்பெற பாடுபட்ட எமது அரசியல் தலைவர்களை நினைத்துப் பார்க்கவேண்டும்.

அன்றைய தலைவர்கள் ஒரே இனத்தவர்களாகவோ, அல்லது ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்களாகவோ இருக்கவில்லை. ரி. பி. ஜயா, டி. எஸ். சேனநாயக்கா, எவ். ஆர். சேனநாயக்கா, சேர். ராஸிக் பரீட், சேர். பொன்னம்பலம் ராமநாதன், சேர். பொன்னம்பலம் அருணாசலம், மகாதேவா போன்ற அனைத்து இனத்தையும் சேர்ந்தவர்களே ஒன்றிணைந்து எமக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தனர்.

எமது இப்போதைய ஒரே நோக்கம் இந்த நாட்டில் சமாதானத்தை கட்டி எழுப்புவதுதான். இதற்காக எமது அனைவரினதும் மனதிலுள்ள குறுகிய சிந்தனைகளையும் குறுகிய எண்ணங்களையும் நாம் எடுத்தெறிய வேண்டும்.

வருங் காலங்களில் நாம் அனைவரும் மிகவும் பொறுமையோடும் உற்சாகத்தோடும் செயல்பட்டு சமாதானத்தை கட்டி எழுப்ப, அதை நிலைநாட்ட, பிரயோசனமான கூட்டு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் துணிந்து வேண்டுகோள் விடுக்கின்றேன் என்றார். வீ-இ

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சிமெந்துக் கூட்டுத்தாபன சகல ஊழியருக்கு முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 162-இ

# விளையாட்டு கழகங்களுடனான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுடனான கலந்துரையாடல் நிகழ்வொன்று எதிர்வரும் ஆறும் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலுக்கு தென்மராட்சி பிரிவிலுள்ள சகல விளையாட்டுக்கழகங்களின் நிர்வாக சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்- மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

பேராதனை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிதி உதவியைப் பெற்றுத்தருவதாகவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

480 க்கும் அதிகமான மாணவர்களுக்கு வசதியை அளிக்கும் இந்த விடுதி நிதிப் பற்றாக்குறை காரணமாக இத்தனை நாட்கள் வரை தடைப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பாவிக்காது கைவிடப்பட்ட நிலையிலுள்ள கட்டடங்களையும் மாணவர் விடுதிகளாகப் புனரமைப்பதற்கும் அமைச்சர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (இ)

# கொலையாளிகளுக்கு ஜனாதிபதி மன்னிப்பு

## சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

(கொழும்பு)

கொலைக் குற்றத்திற்கு நீதிமன்றத்தின் மூலம் மூன்று வருட கடூழியச் சிறைத்தண்டனை பெற்ற இருவருக்கு நீதிமன்றத்தின் அனுமதி இல்லாது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா மன்னிப்பு வழங்கி அவர்களை விடுவித்துள்ளார்.

இதனை கொழும்பு நீதிமன்றத்தின் சட்டத்தரணிகள் சங்கம் வன்மையாக கண்டித்துள்ளது.

நீதிமன்றத்தின் மூலம் தண்டனை பெற்றவர்களை இவ்வாறு விடுவித்துள்ளது சட்டத்தையும் நீதியையும் அவமதிக்கும் செயலாகும் என சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இ

மன்சூர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜினாமா செய்யப் போவதாக அறிவித்துள்ளது. மக்களை ஏமாற்றும் செயலாகும் எனவும் அமைச்சர் மன்சூர் தெரிவித்துள்ளார். இ

ராஜினாமா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளதாகவும் தமது வற்புறுத்தலை வெளிப்படுத்த வீதியில் அவர்கள் நேற்று முன்தினம் இரவு ஊர்வலம் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஆறுபிரதேச சபைகளிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெற்றிபெறுவதால் தாம் முன்னர் அளித்த வாக்குறுதிப்படி நாடாளுமன்ற எம்.பி. பதவியிலிருந்து ராஜினாமா செய்வதாக ஜனாப் அஷ்ரப் ஏற்கனவே தெரிவித்திருந்தது தெரிந்ததே. -இ

கிழக்கு-வவுனியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டபோதும், 40 உள்ளூராட்சி சபைகளில் 18 சபைகளில் மாத்திரமே அதிகாரத்தை அதனால் கைப்பற்றிக்கொள்ள முடிந்தது.

அந்தப் பகுதியிலுள்ள மக்கள் நடந்துமுடிந்த தேர்தல்களில் அரசு மீதான எதிர்ப்பை ஐ. தே. கவை தோல்வியடையச் செய்ததன் மூலம் வெளிக்காட்டியுள்ளனர்.

எதிர்வரும் 24-ந் திகதி தென்மாகாணசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் வெற்றி பெறுவதற்கு அரசு தனது முழு முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

எனினும் தென்பகுதி மக்கள் அரசுக்கு எதிரான தமது எதிர்ப்பை இந்தத் தேர்தல் மூலம் ஒருமித்து தெரிவிக்க உள்ளனர் என்றார். —இ

படையினரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கித்துள்ளனர். இதுவரை மீனவர்மீது 23 தடவைகளுக்கு மேல் கடற்படையினரும், விமானப்படையினரும் தாக்குதல் மேற்கொண்டனர்.

இத்தாக்குதல்களினால் நூற்றுக்கணக்கான மீன்பிடிப்படகுகளும் பெறுமதியான மீன்பிடி சாதனங்களும் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வீ இ)

# பதவி வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்களைக் கோருகின்றது

வீடமைப்பு உத்தியோகத்தர்கள், புத்தகப் பதிவாளர்கள், காசாளர்கள்/இருப்பாளர்கள்.

மேற்படி பதவிகளுக்கான வயதெல்லை 20 வருடங்களுக்கும் 35 வருடங்களுக்கும் இடைப்பட்டதாகும். விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 24ம் திகதியாகும்.

மேலதிக விபரங்களை 'ஈழநாடு' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். (162 இ)

தெற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறார்.

ஆனால் ஜனாதிபதியின் இந்த இனத்துவேஷப் பேச்சுக்களை கூடுதலான சிங்கள மக்கள் விரும்பவில்லை.

இதேநேரம் கிழக்கு மாகாணத்தில் தற்போது நடைபெற்று முடிந்த தேர்தலில் ஆளும் ஐ. தே. கட்சி வெற்றி பெறுவதற்காக கையாண்ட தில்லுமுல்லுகளும் இக்கட்சிக்கு பாதகமாகவே முடிந்துள்ளது.

தென் மாகாணத் தேர்தலில் ஆளும் கட்சியான ஐ. தே. கட்சி தோல்வியடைந்தால் அதன் முழுப் பொறுப்பும் ஜனாதிபதி விஜேதுங்காமீதே விழுந்துவிடும்.

கட்சியை வழி நடத்தும் திறமையும், விவேகமும் இவரிடம் இல்லை என்பதை காரணம் காட்டி ஜனாதிபதி தேர்தலில் இவரை அபேட்சகராக நிறுத்துவதை ஐ.தே. கட்சியின் தலைமைப்பீடம் மீள் பரிசீலனை செய்யக்கூடும்.

இதே நிலைதான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவுக்கும் ஏற்படக் கூடும்.

தாய்க்கும் மகளுக்கும் ஏற்பட்ட தகராறினால் கட்சிக்குள் தற்போதுபெரும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன.

ஒரு சிலர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவுக்கு வயது போய்விட்டது. ஆகவே தலைமைப் பதவியை விட்டுக் கொடுக்க வேண்டும் என்று கோரிவருகின்றார்கள். நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாணத் தேர்தலில் இக்கட்சி பெரிதாக எந்த வெற்றியும் பெறவில்லை.

தென். மாகாணத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தோல்வியடைந்தால், எதிர்காலத்தில் இக்கட்சியின் தலைவர் பதவி இவரின் மகளான சந்திரிகாவிடம் நிச்சயம் மாறிவிடும் என தெரிவித்தது. -இ-வி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு மார்ச் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10336/B